கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.198/2022**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 16.06.2026 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B.(Hons), அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 16.06.2026 | சாட்சி | வா.சா.3 |
| பெயர் | கொளஞ்சியம்மாள் | வயது | 66 |
| கணவர் பெயர் | கோவிந்தராசு | கிராமம் | மதுராந்தக நல்லூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. எனது தாத்தா பொன்னன் மனைவியின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. பொன்னனுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரே மகன். சாட்சி பின்னர் காசாம்பு மற்றும் முத்துகுமரன். முத்துகுமரனின் மனைவி பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது. முத்துகுமரனுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் எனக்கு தெரியாது. கலியபெருமாளின் மனைவிகள் பெயர் என்னவென்றால் அஞ்சலை மற்றும் ஏழைமுத்து. அஞ்சலைக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 8 பிள்ளைகள். 2 மகன்கள் மற்றும் 6 மகள்கள். ஏழைமுத்துக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 1 மகன் மற்றும் 4 மகள்கள். அஞ்சலையின் பிள்ளைகளின் பெயர் என்னவென்றால் மனோகரன், விஜயகுமாரி, தென்னரசு, தமிழரசு மற்றவர்களின் பெயர்கள் ஞாபகமில்லை.

2. ஏழைமுத்துவின் பிள்ளைகளின் பெயர் என்னவென்றால் மூவேந்தன், கலையரசி, இளவரசி, கற்புகரசி மற்றொருவரின் பெயர் ஞாபகமில்லை. காசாம்புவின் மனைவின் பெயர் என்னவென்றால் முதல் மனைவின் பெயர் கிளியம்மாள் மற்றொரு மனைவியின் பெயர் தனலெட்சுமி. சாட்சி பின்னர் தாமாக முன்வந்து காசாம்புக்கு ஒரு மனைவி தான் அவரின் பெயர் கிளியம்மாள் என்று கூறினார். கிளியம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பிள்ளைகள் வீராசாமி மற்றும்

கொளஞ்சியம்மாள். கொளஞ்சியம்மாள் என்பது தான் நான்.

3. முத்துகுமரன் என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் பெரியப்பா. இவ்வழக்கு யார் பெயரில் தொடுக்கப்பட்டுள்ளது என்றால் மனோகரின் சொத்திற்காக தொடுக்கப்பட்டது. எத்தனை பேருக்கு எதிராக இவ்வழக்கு தொடுக்கப்பட்டது என்றால் ஒருவருக்கு எதிராக மட்டுமே தொடுக்கப்பட்டது அவரின் பெயர் என்னவென்றால் காமராஜ். இவ்வழக்கு எத்தனை சொத்துகளுக்கு நடக்கிறது என்றால் 3 1/2 காணி. 3 1/2 காணி சொத்தும் காமராஜரின் வசம் உள்ளதா என்றால் இல்லை. நானோ எனது சகோதரர் வீராசாமியோ அல்லது என்னுடன் பிறந்தவர்களோ சொத்துரிமை கேட்டு வாதியின் பெயரிலோ அல்லது 1ம் பிரதிவாதியின் பெயரிலோ ஏதேனும் வழக்கை தொடுத்துள்ளோமா என்றால் இல்லை.

4. வாதியாகிய மனோகரன் தொடுத்த இவ்வழக்கில் நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் சொத்தில் எனக்கு உரிமை இருப்பதாகவோ அதை நான் விட்டு கொடுத்ததாக சங்கதிகள் உள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கு சொத்தானது முத்துகுமரனும் காசாம்பும் கூட்டாக வாங்கிய சொத்து என்றால் சரிதான். கூட்டாக வாங்கிய சொத்தில் பாகம் பிரிக்கப்பட்டதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ற்காக சாட்சி சொல்ல வந்த நிலையில் வா.சா.ஆ.1 யை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எப்போது பார்த்தேன் என்றால் நீதிமன்றத்தில் முதன்மை விசாரணை சமயத்தில் பார்த்தேன். அதில் உள்ள அடித்தல் திருத்தல் பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. அதில் ஆறுமுகம் என்பவர் அடையாள சாட்சி கையொப்பம் இட்டு அதில் அடித்திருக்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. உயிலில் உள்ள நிபந்தனைகள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

5. பாகம் பிரியப்படதா சொத்திற்கு உயிலை எழுத முடியாது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். சாட்சி தாமாக முன்வந்து உயிலில் உள்ள சொத்துகளுக்கு சகோதரர்களில் இடையே வாய்மொழியாக பிரிந்து கொண்டார்கள் என்று கூறினார். வாய்மொழி பாகத்தை பற்றிய விவரங்களை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. உயில் மூலம் யார் யாருக்கு என்னென்ன உரிமைகள் வழங்கப்பட்டது என்ற விவரங்களை அறிந்து கொள்ள முயற்சி செய்தேனா என்றால் இல்லை. உயிலை இயற்றிய முத்துகுமரன் கையெழுத்து போடக்கூடியவர் என்றால் சரிதான். உயிலில் கையெழுத்து தான்

போடப்பட்டதா என்றால் கையெழுத்து தான் போட்டார்.

6. 1971ல் எவ்வளவு கடன் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. அப்பொழுது நிலுவிய குடும்ப கடனை அடைப்பதற்காக கிரயம் எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. கலைச்செழியன் யார் என்றால் எனது அண்ணன் வீராசாமியின் மகன். எனது அப்பா காசாம்பு மற்றும் எனது சகோதரர் வீராசாமி ஆகியோர் கிரயம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மனோகரன், கலைச்செழியன் மற்றும் அஞ்சலை கொடுத்த கிரயம் தெரியுமா என்றால் தெரியாது. ரங்கசாமியின் மகன் ரத்தினசாமி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவரிடம் பெறப்பட்ட Pronote கடனுக்காக கிரயம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அந்த கிரயத்தை தொடர்ந்து பல கிரயங்கள் ஏற்பட்டு இறுதியாக 1ம் பிரதிவாதியான காமராஜரின் வசம் வழக்கு சொத்தானது கிரயம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

7. காமராஜரிடம் நான் சொத்து தொடர்பாக பேசியுள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் தான் சந்தித்தேன். நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியவாறு சொத்து தொடர்பாக காமராஜரிடம் பேசவில்லை என்றால் சரிதான். வாதி மனோகரனுக்கு ஒரு தம்பி உள்ளார் என்றாலும் ஏழைமுத்துவிற்கும் ஒரு ஆண் மகன் உள்ளார் என்றாலும் மனோகரனுக்கு தம்பி இல்லை ஏழைமுத்துக்கு மகன் இருந்தார். உயில் பற்றி எந்த விவரமும் தெரியாமல் வாதியான மனோகரன் கேட்டு கொண்டதன் பேரில் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயிலை பற்றி எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை 1ம் பிரதிவாதி தரப்பில் முடிக்கப்பட்டு 2 - 4 ம் பிரதிவாதி தரப்பின் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(Sd/- E.Swetha)
Additional District Munsif
Chidambaram